# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

-----

## வகுப்பு 11

பதிவெண் | | | | | |

நேரம்: 2.30 மணி **PART - III - பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு: 20×1=20

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.
iii) விடையினைக் குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.

1) பற்றாக்குறை பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

2) அங்காடி என்பது ..............
அ) பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
ஆ) பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
இ) விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்
ஈ) நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும் விற்கும் முறையைக் குறிக்கும்

3) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாடு விதியின் மறுபெயர் ..............
அ) தேவை விதி ஆ) சமநோக்கு வளைகோடு
இ) காசனின் முதல் நுகர்வு விதி ஈ) பதிலீட்டு விதி

4) இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு
அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக

5) தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ..............
அ) பெர்கூசன் ஆ) கீன்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) மார்ஷல்

6) சமநோக்கு வளைகோடுகள்
அ) செங்குத்துக் கோடுகள் ஆ) படுக்கைக் கோடுகள்
இ) நேர்மறைச் சரிவுடையவை ஈ) எதிர்மறைச் சரிவுடையவை

7) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு

8) நீண்ட கால உற்பத்தி சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?
அ) தேவை விதி ஆ) அளிப்பு விதி
இ) விகித அளவு விளைவு விதி ஈ) மாறா விகித அளவு விளைவு விதி

9) பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்

10) வெளியுறுச் செலவு மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் .............. செலவாகும்.
அ) சமூக ஆ) பொருளாதார இ) பண ஈ) மாறா

11) சராசரி மாறா செலவுக்கான வாய்ப்பாடு
அ) TC/Q ஆ) TVC/Q இ) TFC/Q ஈ) TAC/Q

12) நீண்ட கால சராசரி செலவுக்கோடு .............. கோடு என அழைக்கப்படுகிறது.
அ) தேவைக் ஆ) திட்ட இ) உற்பத்தி ஈ) விற்பனை

13) முற்றுரிமையில் MR கோடு .............. கோட்டிற்கு கீழிருக்கும்.
அ) TR ஆ) MC இ) AR ஈ) AC

14) விலை பேதம் காட்டுதலின் விளைவு .............. ஆகும்.
அ) குறைவான உற்பத்தி ஆ) அதிக இலாபம் இ) பல்வேறு விலை ஈ) ஆ மற்றும் இ

15) விற்பனை செலவிற்கு உதாரணம்
அ) கச்சாப்பொருள் விலை ஆ) போக்குவரத்துச் செலவு
இ) விளம்பர செலவு ஈ) கொள்முதல் செலவு

16) போலி வாரம் என்ற கருத்து யாருடன் தொடர்புடையது?
அ) ரிக்கார்டோ ஆ) கீன்ஸ் இ) வாக்கர் ஈ) மார்ஷல்

Scanned by CamScanner

17) இலாபம் இதற்கான வெகுமதி
அ) நிலம் ஆ) அமைப்பு இ) மூலதனம் ஈ) உழைப்பு
18) 'அரசியல் பொருளாதாரம்' என்ற நூலின் ஆசிரியர்
அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல் இ) A.C. பிகு ஈ) F.A. வாக்கர்
19) கலப்புப் பொருளாதாரம் என்பது
அ) தனியார்துறை மற்றும் வங்கிகள்
ஆ) பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது
இ) பொதுத்துறை மற்றும் வங்கிகள் ஈ) பொதுத்துறைகள் மட்டும்
20) தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) டாக்டர் இராதாகிருஷ்ணன் ஈ) V.K.R.V. இராவ்

## பகுதி - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**
**அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) ஏங்கலின் விதி என்றால் என்ன?
22) கிஃபன் பொருட்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
23) உற்பத்தி சார்பினை குறிப்பிடுக.
24) அளிப்புக்கோடு மேல் நோக்கி செல்வதன் காரணம் என்ன?
25) இறுதிநிலைச் செலவு என்றால் என்ன?
26) விலையை ஏற்பவர் யார்?
27) உபரி சக்தி விளக்குக.
28) நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
29) பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக.
30) பொருளியல் என்றால் என்ன?

## பகுதி - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**
**அவற்றில் வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32) மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலைப் பயன்பாட்டிற்கும் உள்ள உறவை விளக்குக.
33) தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
34) பணச்செலவு, உண்மைச் செலவு வேறுபாடுகளைக் கூறுக.
35) விற்பனைச் செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
36) AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
37) கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
38) கிராம சர்வோதயம் சிறு குறிப்பு வரைக.
39) சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களாக கிளார்க் கூறுவனவற்றை குறிப்பிடுக.
40) தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) சமஅளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) பல்வேறு விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
42) அ) தேவை விதி மற்றும் அதன் விதிவிலக்குகளை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) பொருளியலின் பல்வேறு பிரிவுகளை விவரிக்கவும்.
43) அ) நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்குக. **(அல்லது).**
ஆ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரிக்கவும்.
44) அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரிக்கவும்.
45) அ) முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவைத் தீர்மானிப்பதை விளக்குக. **(அல்லது)**
ஆ) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரிக்கவும்.
46) அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.
47) அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) இறுதிநிலை உற்பத்தித்திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக.

@@@@@@

Scanned by CamScanner